**ஏப்ரல் – 14**

# TNPSC துளிகள்

- குனீத் மோங்கா என்பவரைக் கௌரவப் படுத்தும் விதமாக 'Knight of the Order of Arts and Letters' (செவாலியர் விருது) என்ற பட்டமானது வழங்கப்பட உள்ளது.
    - இது பிரான்சின் இரண்டாவது மிக உயர்ந்த குடிமையியல் கௌரவமாகும், இதற்கு முன்னர் மெரில் ஸ்ட்ரீப், லியோனார்டோ டிகாப்ரியோ மற்றும் புரூஸ் வில்லிஸ் போன்ற பெரிய ஹாலிவுட் நடிகர்களுக்கு இது வழங்கப்பட்டது.
- ஐக்கிய அரபு அமீரகமானது, நாட்டின் முதல் பெண் விண்வெளி வீரர் உட்பட அதன் விண்வெளித் திட்டத்தில் அடுத்த இரண்டு விண்வெளி வீரர்களின் பெயர்களை வெளியிட்டு உள்ளது.
    - ஐக்கிய அரபு அமீரகத்தின் முதல் பெண் விண்வெளி வீரர் நௌரா அல் மத்ரூஷி (Noura al-Matroush) ஆவார்.
- மேம்பட்ட பழம்பொருட்கள் மேலாண்மை அமைப்பானது சமீபத்தில் கோவா அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.
    - இது பழங்காலப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கான முதல் அமைப்பாகும்.

# தேசியச் செய்திகள்

## மத உரிமை

- அண்மையில் நடந்த வழக்கில், தங்கள் மதத்தைத் தேர்வு செய்ய மக்களுக்குச் சுதந்திரம் இருப்பதாக உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- மதத்தை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் அரசியலமைப்பின் கீழ் மக்களுக்கு உரிமை உண்டு (பிரிவு 25).
- மத நம்பிக்கை என்பது தனியுரிமைக்கான அடிப்படை உரிமையின் ஒரு பகுதியாகும்.
- அரசியலமைப்பு அமர்வின் தீர்ப்பானது ஏற்கனவே வாழ்க்கை, கௌரவம் மற்றும் சுதந்திர உரிமையுடன் இதை சமன் செய்து, தனியுரிமைக்கான உரிமையின் மீற முடியாத தன்மையை உறுதி செய்துள்ளது

## டிக்கா உத்சவம்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சமீபத்தில் மாநில முதலமைச்சர்களிடம் "டிக்கா உத்சவம்" என்ற நிகழ்வை ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்து உள்ளார்.
- டிக்கா உத்சவம் ஒரு தடுப்பூசித் திருவிழாவாகும்.
- இது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 முதல் ஏப்ரல் 14 வரை நடைபெற உள்ளது.
- இந்தத் திருவிழாவின் முக்கிய நோக்கமானது, முடிந்தவரை மக்கள் பலருக்குத் தடுப்பூசி இடுவதாகும்.
- இது COVID-19 தடுப்பூசியின் பூஜ்ஜிய விரயம் குறித்தும் கவனம் செலுத்தும்.
- COVAXIN மற்றும் COVISHIELD ஆகியவை தற்போது இந்தியாவில் நிர்வகிக்கப்படும் இரண்டு முக்கிய COVID-19 தடுப்பூசிகள் ஆகும்.




## AICTE லீலாவதி விருதுகள் 2020

- ❖ ஆறு உயர்கல்வி நிறுவனங்களுக்கு அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவின் (AICTE – All India Council for Technical Education) லீலாவதி விருதுகள் 2020 வழங்கப் பட்டு உள்ளது.
- ❖ இது 'பெண்களுக்கு அதிகாரமளித்தல்' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- ❖ இந்த விருதிற்கு, 12 ஆம் நூற்றாண்டின் “லீலாவதி” என்ற புத்தகத்தின் பெயரிடப் பட்டு உள்ளது.
- ❖ இந்தப் புத்தகத்தைக் கணிதவியலாளர் இரண்டாம் பாஸ்கரா என்பவர் எழுதி உள்ளார்.
- ❖ லீலாவதி என்பவர் இந்தியக் கணிதவியலாளர் இரண்டாம் பாஸ்கராவின் மகளாவார்.

***வெற்றியாளர்கள்***

- ❖ 'மகளிர் தொழில்முனைவோர்' எனும் துணை கருப்பொருளில் தமிழ்நாட்டின் சோனா தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த SWEAT அமைப்பானது (Sona Women Entrepreneurship and Training) வென்றுள்ளது.
- ❖ இரண்டாம் இடமானது, 'டிஜிட்டல் கல்வியறிவு' எனும் துணைக் கருப்பொருளின் கீழ் பாரதிய வித்யா பீடத்துக்கு வழங்கப்பட்டது.
- ❖ புனேவின் மேலாண்மை மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனமானது 'கல்வியறிவு' என்ற துணை கருப்பொருளின் கீழ் விருதை வென்றது.
- ❖ மேலும், மகாராஷ்டிராவின் வால்சந்த் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த WIT என்ற மகளிர் சுகாதாரக் கூட்டணியானது 'மகளிர் உடல்நலம்' எனும் துணை கருப்பொருளின் கீழ் விருதை வென்றது.
- ❖ இவர்களைத் தவிர, தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ரேடியன்ட் சீதா அவர்கள் 'சட்ட விழிப்புணர்வு' எனும் பிரிவில் விருதை வென்று உள்ளார், அதே சமயம் தமிழ்நாட்டின் புனித ஜோசப் பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த செல்வி பரித்ரானா, 'தற்காப்பு' பிரிவில் விருதை வென்று உள்ளார்.

# சர்வதேசச் செய்திகள்

## மிகப்பெரிய தடையில்லா வர்த்தக ஒப்பந்தம்

- விரிவான பிராந்திய பொருளாதார கூட்டு ஒப்பந்தத்திற்கு (RCEP - Regional Comprehensive Economic Partnership) சிங்கப்பூர் ஒப்புதல் அளித்துள்ளது.
- இது சீனா தலைமையிலான உலகின் மிகப்பெரிய தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் ஆகும்.
- இவ்வாறு செய்ததில், அதில் பங்கு பெறும் 15 நாடுகளில் இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்த முதல் நாடாக சிங்கப்பூர் உருவெடுத்துள்ளது.
- இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வர குறைந்தபட்சம் ஆறு ஆசியான் மற்றும் மூன்று ஆசியான் அல்லாத உறுப்பு நாடுகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- செயல்படுத்தப்பட்டதும், இந்த ஒப்பந்தம் உலகின் மிகப்பெரிய தடையில்லா வர்த்தக ஒப்பந்தமாகும், மேலும் இது உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கையும், உலகப் பொருளாதாரத்தில் சுமார் 30% என்ற அளவினையும் உள்ளடக்கும்.
- இந்த ஒப்பந்தம் 10 ஆசியான் பொருளாதாரங்கள் மற்றும் ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான், நியூசிலாந்து மற்றும் தென் கொரியா ஆகியவற்றை உள்ளடக்கிய பல நாடுகளின் வர்த்தக ஒப்பந்தமாகும்.
- RCEP ஒப்பந்தம் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கையெழுத்தானது.
- இந்தியா 2019 ஆம் ஆண்டில் இதிலிருந்து விலகியது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## சிலிக்கா ஏரியில் டால்பின்கள் (ஓங்கில்)

- டால்பின் கணக்கெடுப்பு குறித்த இறுதித் தரவுகளை ஒடிசா அரசானது வெளியிட்டு உள்ளது.
- சிலிக்காவில் டால்பின்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இரு மடங்காக அதிகரித்துள்ளது.
- சிலிக்கா ஏரியில் இந்த ஆண்டு 188 டால்பின்களை வன அதிகாரிகள் கண்டுள்ளனர், இது 2020 ஆம் ஆண்டில் 163 ஆக இருந்தது.
- இந்தக் கணக்கெடுப்பின் போது மூன்று வகை இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ஐராவதி, பாட்டில்-மூக்கு மற்றும் ஹம்பேக் டால்பின்கள் இந்த ஆண்டு காணப்பட்டன.
- 2021 ஆம் ஆண்டின் டால்பின் கணக்கெடுப்பு அறிக்கையில் கஹிர்மாதா ஆனது டால்பின்களின் மிகப்பெரிய வசிப்பிடம் என்றும் தெரிய வந்துள்ளது.
- அருகிவரும் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகளைப் பாதுகாக்க 1997 ஆம் ஆண்டில் கஹிர்மாதா ஒரு கடல் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது.
- கஹிர்மாதா கடற்கரையானது உலகிலேயே அதிகளவில் கடல் ஆமைகள் முட்டையிடும் இடமாகும்.
- சிலிக்கா ஏரியானது இந்தியாவின் மிகப்பெரிய உவர் நீர் ஏரியாகும்.
- டால்பின்கள் இந்திய வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் 1972 என்ற சட்டத்தின் அட்டவணை I, அருகி வரும் உயிரினங்களுக்கான சர்வதேச வர்த்தகத்திற்கான ஒப்பந்தத்தின் பின் இணைப்பு I, இடம்பெயர் உயிரினங்கள் தொடர்பான ஒப்பந்தத்தின் பின் இணைப்பு II, பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் சிவப்புப் பட்டியல் (அருகி வரும் இனம்) ஆகியவற்றில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

# விளையாட்டுச் செய்திகள்

## நேத்ரா குமணன்

- படகோட்டுதல் போட்டியில் ஒலிம்பிக்கிற்குத் தகுதி பெற்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை நேத்ரா குமணன் பெற்றார்.
- ஒலிம்பிக்கின் படகோட்டும் போட்டிக்குத் தகுதி பெறும் 10வது இந்தியர் இவராவர்.

# முக்கிய தினங்கள்

## உலக பார்கின்சன் தினம் - ஏப்ரல் 11

- இது ஒரு நரம்பு மண்டலக் கோளாறாகும்.
- இந்த நாள் லண்டனைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ் பார்கின்சனின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- பார்கின்சன் நோயின் அறிகுறிகளுடன் ஆறு நபர்களை முறையாக விவரித்த முதல் நபர் இவராவார்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, பார்கின்சன் மற்றும் பார்கின்சன் கவனிப்பில் மன ஆரோக்கியம் (Mental Health in Parkinson’s and Parkinson’s Care) என்பதாகும்.





## மனித விண்வெளிப் பயணத்திற்கானப் பன்னாட்டு நாள் - ஏப்ரல் 12




- ஐ.நா பொதுச் சபையானது ஏப்ரல் 12 ஆம் தேதியை மனித விண்வெளிப் பயணத்திற்கான பன்னாட்டு நாளாகக் கொண்டாடுவதாக அறிவித்தது.
- 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 அன்று முதலாவது மனித விண்வெளிப் பயணமானது யூரி காகரினால் மேற்கொள்ளப்பட்டது.
- சோவியத் குடிமகனான இவர் விண்வெளியில் பயணம் செய்த முதல் மனிதராவார்.
- மேலும் 1981 ஆம் ஆண்டின் ஏப்ரல் 12 ஆம் தேதியன்று கொலம்பியாவின் 1வது விண்வெளி விண்கலமான எஸ்.டி.எஸ்-1 என்ற விண்கலமானது விண்ணில் ஏவப் பட்டது.
- 1963 ஆம் ஆண்டின் ஜூன் 16 ஆம் தேதியன்று வாலண்டினா தெரஸ்கோவா பூமியைச் சுற்றி வந்த முதல் பெண்மணி ஆனார்.
- 1969 ஆம் ஆண்டின் ஜூலை 20 ஆம் தேதியன்று நீல் ஆம்ஸ்ட்ராங் சந்திரனின் மேற்பரப்பில் கால் வைத்த முதல் மனிதர் ஆனார்.
- அப்பல்லோ மற்றும் சோயுஸ் ஆகியவை முதல் அமெரிக்க-ரஷ்ய விண்வெளி விமானங்களாகும்.

## ஜாலியன்வாலா பாக் படுகொலை நாள் - ஏப்ரல் 13

- ஜாலியன்வாலா பாக் படுகொலை என்பது 1919 ஆம் ஆண்டில் அமிர்தசரஸின் ஜாலியன்வாலா பாக் என்ற இடத்தில் நடந்த சம்பவத்தைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டு இச்சம்பவத்தின் 102வது ஆண்டு நிறைவாகும்.
- 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதியன்று பைசாகி என்ற பண்டிகையைக் கொண்டாட வேண்டி ஜாலியன்வாலா பாக்கில் மக்கள் கூடினர்.
- காவல் அதிகாரி ஜெனரல் டயர் தனது படைகளுக்கு அங்கு இருந்த மக்களைச் சுடுமாறு உத்தரவிட்டார்.
- இதன் பின்னர், இதை விசாரிக்க ஹண்டர் கமிஷன் அமைக்கப்பட்டது.
- ஆனால் ஜெனரல் டயரின் நடவடிக்கையைப் பஞ்சாப் துணைநிலை ஆளுநர் சர் மைக்கேல் ஓ டயர் பாராட்டியிருந்தார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★